# எங்கள் குரல்

குழந்தைகளின் இதழ்



**April 2021, Volume:02**

எங்களின் படைப்புகள்



## ‘எங்கள் குரல்’ ஆசிரியர் குழு

சுதா
8வது, கீழ ஈரல், கோவில்பட்டி

கன்னிராஜ்
7வது, கீழ ஏரல், கோவில்பட்டி

அனுஷியா
8வது, வள்ளுவர் நகர், கோவில்பட்டி

நீலாவதி
11வது, கூசாலிபட்டி-II, கோவில்பட்டி

தன பால குமார்
10வது, விஸ்வநாத தாஸ் நகர், கோவில்பட்டி

கமலா ராணி
6வது, கூசாலிப்பட்டி-I, கோவில்பட்டி

வர்ஷினி
6வது, மீனம்பாள்புரம், மதுரை

அகல்யா
6வது, ஜவஹர்லால்புரம், மதுரை

நாகார்ஜுன்
7வது, அம்பேத்கர் காலனி, மதுரை

மாரிசெல்வம்
6வது, வள்ளுவர் நகர், கோவில்பட்டி

கவிப்பிரியா
9வது, மீனாம்பாள்புரம், மதுரை

கவிதா
8வது, புங்கவர்ணத்தம், கோவில்பட்டி

தர்ஷினி
9வது, மஞ்சநாயக்கன்பட்டி, கோவில்பட்டி

பிரபாகரன்
5வது, விஸ்வநாத தாஸ் நகர், கோவில்பட்டி

அபிஷேக்
5வது, ஜவஹர்லால்புரம், மதுரை

## வழிநடத்தல்

சின்னராஜ், நிர்வாக அறங்காவலர், சிடார் மதுரை

மைகேல், சிடார் கோவில்பட்டி

மாரிகண்ணன், சிடார் கோவில்பட்டி

நாகராஜ், சிடார் மதுரை

## வடிவமைப்பு

குரு பிரகாஷ், சிடார் மதுரை

# பொருளடக்கம்


1. குழந்தைகளின் சிறுகதைகள்........................................ (02)
   1.1 தீய சிந்தனை தவிர்ப்போம்........................................ (02)
   1.2 நன்றி மறவாத நண்பன்........................................ (03)
   1.3 ஆட்டோகாரனும் அதிர்ஷ்ட தேவதையும்........................................ (05)
   1.4 கிடைத்ததை விடலாமா........................................ (07)
   1.5 சொர்கத்திற்கு செல்லும் வழி........................................ (08)
   1.6 மோட்டார் வண்டி உருவான கதை........................................ (09)
   1.7 பழைமை பொன்போன்றது........................................ (10)
   1.8 ஒற்றுமையே பலம்........................................ (11)
   1.9 சொர்க்கம் எது........................................ (12)
   1.10 கரடியும் நண்பர்களும்........................................ (13)
   1.11 தாத்தாவும் நாய் குட்டியும்........................................ (14)

2. குழந்தைகளின் கவிதைகள்........................................ (17)
   2.1 நமது கடமை ........................................ (17)
   2.2 கொரோனா விழிப்புணர்வு........................................ (18)
   2.3 மழை பொம்மை யானை........................................ (19)
   2.4 நல்ல எதிர்காலம்........................................ (20)
   2.5 காந்தியடிகள் பாடல்........................................ (21)
   2.6 கொரோனா தாக்குதலின் வேதனைகள்........................................ (22)
   2.7 கடலோடு விளையாடு........................................ (23)
   2.8 கருத்த புள்ளே ........................................ (24)
   2.9 புதுவாழ்வு........................................ (25)

3. குழந்தைகளின் படைப்பு........................................ (26)
   3.1 ஓவியம்........................................ (26)
   3.2 புகைப்படம்........................................ (30)
   3.3 குழந்தைகளால் உருவாக்கபட்ட குழந்தைகளின் படம்.......... (33)

# எங்கள் குரல் இதழ்



உலகில் மனிதர்கள் தோன்றி பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டது, இருப்பினும் அன்று முதல் இன்று வரை வாய்ப்பற்ற, வலுவற்ற குரலாகவே குழந்தைகளாகிய எங்கள் குரல், வீடுகளிலும், பள்ளிகளிலும், சமூகத்திலும் ஆதிக்கமுள்ளவர்களின் அடக்குமுறையில் அடங்கிவிடுகிறது. பள்ளிகளில் ஆசிரியரின் பிடியில், வீடுகளில் பெற்றோர்களின் பிடியில், சமூகத்தில் பெரியவர்களின் பிடியில் என்று எங்கள் சுதந்திரம் சுழன்று சுழன்று சுற்றுகிறது. ஏன் குழந்தைகளாகிய நாங்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு உரிமை இல்லை? என்ற கேள்வி எங்களைப் போன்ற குழந்தைகளின் மனதில் தினந்தோறும் ஓடிகொண்டே இருக்கிறது. அதையும் அனுமதி கேட்டுத்தான் சொல்ல வேண்டுமோ? எங்களுக்கான சுதந்திரம் என்பது கருத்துக்களையும், சிந்தனைகளையும், படைப்புகளையும் சுதந்திரமாக இவ்வுலகிற்கு வெளிக்காட்டுவதே ஆகும். அதற்கான ஒரு முயற்சி தான் எங்கள் குரல் இதழ்! குழந்தைகளுக்கே உரிய சிறப்பு இதழ், பெரியவர்களாகிய உங்களையும் எங்கள் இதழை வாசிக்க அழைக்கிறோம்!



குழந்தைகளின்

# சிறுகதைகள்

## 1. தீய சிந்தனை தவிர்ப்போம்

ஒரு பஞ்சப்பட்ட கிராமம், அந்தக் கிராமத்தில் பள்ளிக்கூடம் கிடையாது, அங்கிருக்கும் குழந்தைகள் வேறொரு ஊருக்குச் சென்றுதான் பள்ளியில் படிப்பார்கள். அந்தப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் கிருஷ்ணா, பாண்டியென இருவர் இருந்தனர். ஆனால், கிருஷ்ணா நல்லவன், ஆனால் என்ன அந்தப் பாண்டி தான் மிகவும் கெட்டவன். ஒருநாள்! பள்ளி மாடிக்கு கிருஷ்ணாவும், பாண்டியும் சென்றிருந்தார்கள். அப்போது கிருஷ்ணா மாடியின் கீழே பூச்செடிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான் அப்போது பாண்டிக்கு கிருஷ்ணாவைப் பிடிக்காது அதனால், கீழே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த கிருஷ்ணாவை கீழே தள்ளி விடலாம் என்று திட்டம் தீட்டினான், அதை அவனாகப் பேசிக் கொண்டிருக்கும் போது, அந்தப் பள்ளியில் படிக்கும் மாணவன் கண்ணன் கேட்டுவிட்டான். அவன் மனதுக்குள், கிருஷ்ணா மிகவும் நல்லவனாச்சே; அவனுக்கா பாண்டி தீங்கு செய்ய நினைக்கிறான் என்று, பள்ளியின் தலைமையாசிரியரிடம் கூறினான், உடனே ஆசிரியரும், கண்ணனும் மாடிக்குச் சென்று, பாண்டியிடம் நீ திட்டம் போட்டது எல்லாம் எங்களுக்குத் தெரியும் ஏன் இப்படி செய்கிறாய். நீ நாளைக்கு உன் அம்மாவை வரச்சொல் என்றார், மறுநாள் பாண்டியின் அம்மாவை வரச்சொல்லி உங்கள் மகன் ஏன் இப்படி செய்கிறான் எனக்குத் தெரியவில்லை, ஆசிரியரே இவன் இப்படி செய்ததுக்கு என்ன தண்டனை வேனாலும் ஒரு ஆசிரியராகக் கொடுக்கலாம் என்று கூறிவிட்டார் பாண்டியின் அம்மா. அதனால் ஆசிரியர் மூன்று நாள் மண்ணில் முழங்கால் போடச் சொன்னார். நண்பர்களே, நீங்களும் தவறு செய்யாதீர்கள்.

- ஆ. அனுபுரீ, வகுப்பு-4,
தாமஸ்நகர், சிடார் குழந்தைகள் வளமையம்.

# 2. நன்றி மறவாத நண்பன்



தேனி மாவட்டத்தில் அழகிய கிராமம் அது, அழகிய மலைகளும், பச்சை போர்வை போர்த்திய வயல்வெளிகளும், நளினமாக வளைந்து ஓடும் ஆறுகளும் கண்களுக்கு விருந்தாகக் காட்சியளிக்கும்.

இந்த அழகிய ஊரில் ஒரு தம்பி வசந்த், அப்பா, அம்மாவுடன் வாழ்ந்து வந்தான். மீனாவின் வீடு மிக எளிமையான குடிசை வீடு. மீனா, கோழிகள் மற்றும் ஆடுகள் ஆகியவற்றை அன்புடன் வளர்த்து வந்தாள். அவைகளும் அவள்மீது அன்பு செலுத்தின. ஒரு நாள் ஆட்டுக்குட்டி ஒன்று மாட்டுவண்டியில் அடிபட்டு வலியால் துடித்துக்கொண்டிருந்தது அதனைக் கண்ட மீனா ஓடிச் சென்று ஆட்டுக்குட்டிக்கு முதல் உதவி செய்து காப்பாற்றினாள். வழி தவறி வந்த அந்த ஆட்டுக்குட்டியை தன் நண்பனாக நினைத்துத் தன் வீட்டில் வளர்த்து வந்தாள்.

ஒரு நாள் மீனாவின் அப்பா, சாலையில் வரும்போது ஒரு விபத்தில் அடி பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஆபத்தான நிலையில் இருந்த மீனாவின் அப்பா உயிர் பிழைக்க வேண்டும் என்றால் உடனடியாக அறுவை செய்ய வேண்டும் என்றும் அதற்கு ரூபாய் பத்தாயிரம் செலவாகும் என்றும் உடனடியாகப் பணத்தை செலுத்துமாறு மருத்துவர்கள் கூறினர். மீனா ஒன்றும் செய்வது அறியாமல் அம்மா, தம்பியுடன் சேர்ந்து வருத்தபட்டுக்கொண்டிருந்தாள், மீனாவின் அம்மா, மீனாவிடம் இந்த ஆடுகள் கோழிகளையேல்லாம் விற்று விட்டு மருத்துவ செலவுக்குப் பயன்படுத்துவோம் என்றார்...

...மீனாவுக்கு மனது வலித்தது இருந்தபோதிலும் தன் அப்பாவைக் காப்பாற்றவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் தான் காப்பாற்றிய ஆட்டுக்குட்டியை மட்டும் விட்டுவிட்டு மற்றவையேல்லாம் விற்று விடுமாறு தன் அம்மாவிடம் கூறினாள். மறுநாள் வியாபாரி ஒருவர் வண்டியுடன் மீனா வீட்டிற்க்கு வந்தார், தான் காப்பாற்றிய ஆட்டுக்குட்டியை தவிர எல்லாவற்றையும் வண்டியில் ஏற்றினார் வியாபாரி. எட்டாயிரம் ருபாய்க்குத் தான் அவை அனைத்தும் விலை போயின, அந்த ஆட்டுகுட்டியையும் கொடுத்தால் பத்தாயிரம் ரூபாய் தருவதாக வியாபாரி கூறினார். இதனைப் பார்த்த அந்த ஆட்டுக்குட்டி தானாகவே நடந்து போய் வண்டியில் ஏறியது. அந்த ஆடு மீனாவைப் பார்த்த பார்வை அவளுக்குப் புரிந்தது. அன்றைக்கு அடிபட்டுக் கிடந்த என்னைக் காப்பாற்றி உயிர் கொடுத்தாய் அந்த நன்றி கடனுக்காக என் உயிரைக் கொடுத்து உன் அப்பாவின் உயிரைக் காப்பாற்றுகிறேன் என்று கூறியது போல் இருந்தது. மறுநாள் மீனாவின் அப்பா அறுவை சிகிச்சை முடிந்து கண் விழித்தபோது அந்த ஆட்டுக்குட்டியின் கண்கள் மூடின.



- எம். இசக்கிமுத்து வகுப்பு-6,

சிடார் குழந்தைகள் வள மையம், விஸ்வநாததாஸ் நகர்

# 3. ஆட்டோகாரனும் அதிர்ஷ்ட தேவதையும்

ஒரு ஊரில் அம்மா, அப்பா, அண்ணன், இரண்டு தங்கைகள் வாழ்ந்து வந்தனர். அப்பா ஆட்டோ ஓட்டித் தன் குழந்தைகளைப் படிக்க வைத்தார். அப்பாவிற்கு வயது ஆகிவிட்டது. குடும்பத்திற்கும் வருமானம் போதவில்லை என்ன செய்வதென்று யோசித்து கொண்டிருந்தார். அப்போதுதான் அப்பா ஆட்டோவை விற்றுவிட்டு "watchmen" வேலைக்குச் செல்வது என்று முடிவெடுத்தார். அப்போது மகன், அப்பா ஆட்டோவை ஏன் விற்க வேண்டும், நான் இந்த ஆட்டோவை ஓட்டுகிறேன், என்று சொன்னார் மகன். சரிப்பா நீயே ஓட்டு என்றார் அப்பா, நான் கிராமத்திற்கு போய் ஓட்டுகிறேன். நீ 'நகரத்திற்கு' போய் ஓட்டலாம் அல்லவா? வசதி இல்லதாவர்கள் பேருந்தில் போக முடியாது, அது மட்டும் இல்லாமல் பேருந்தில் சில பல கிராமத்திற்கு செல்லவில்லை. அதற்க்கு அப்பா, சரி இது நல்ல யோசனைதான் பார்த்துப் போயிட்டு வா.

[மகன், ஆட்டோவை எடுத்துக் கொண்டு சவாரிக்கு செல்கிறான்]

[சில நாட்களில் மகன் ஆட்டோவைத் தன் சொந்த ஆட்டோவாக மாற்றிக்கொண்டான். அவன் யாரிடமும் கூடுதலாகப் பணம் வாங்க மாட்டான். அவன் எல்லோர்க்கும் உதவி செய்பவன்]

ஒரு நாள் அவன் சவாரிக்கு செல்லும்போது விபத்து ஒன்று நடந்தது, ஆனால் அவன் சரியாகத்தான் வந்தான். எதிரில் வந்தவன் தான் தவறாக வண்டியை ஓட்டி வந்தான். அவன் ஒரு பேராசை பிடித்தவன், அவன் ஆட்டோக்காரனிடம் பணம் கேட்டு மிரட்டினான், ஆட்டோகாரன் அதிர்ச்சியில் நின்றான், எதிரில் வந்தவன் மருத்துவமனைக்குச் சென்று கையில் பெரிய கட்டுக் கட்டி ஆட்டோக்காரனனிடம் பணம் கேட்டு மிரட்டினான்.

ஆட்டோக்காரன் : நானே ஏழை இதில் எப்படி ஒரு லட்சம் உனக்கு நான் கொடுப்பேன் என்று சொன்னான். ஆட்டோக்காரர் யோசித்து கொண்டு நடந்து கொண்டேயிருந்தார், அப்போது அவனுக்கு ஒரு கல் தட்டி விட்டது. அவன் கண் முன்னே ஒரு தேவதை தோன்றியது.

தேவதை : தம்பி என்ன யோசித்துக்கொண்டிருக்கிறாய்?

ஆட்டோக்காரன் : நடந்ததை சொன்னான்.

தேவதை : கவலைப்படாதே 'நான் அந்தப் பணத்தை உனக்குத் தருகிறேன்.

ஆட்டோக்காரன் : இருக்கட்டும் வேண்டாம்.

தேவதை : இல்லை, தம்பி வாங்கிக்கொள்

ஆட்டோக்காரன் அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்று பணத்தை அவனிடம் கொடுத்தான். உடனே பணம் கேட்டவன் நானே ஒரு ஏழை என்னிடம் பணம் இல்லை என்று சொன்னானே எப்படி இவனிடம், இவ்வளவு பணம் என்று நினைத்து இன்னும் இரண்டு லட்சம் பணம் கேட்டான்.

ஆட்டோக்காரன் திகைத்து நின்றான்" எதிரில் வந்தவன், வண்டியில் சென்றுகொண்டிருந்தார், ஆட்டோக்காரன் கண் முன்னாடியே ஒருவன் அவனை இடித்து நிற்காமல் போய்விட்டான்.

ஆட்டோக்காரன் உடனே அவனை மருத்துமனைக்கு அழைத்துச் சென்றான். எதிரில் வந்தவன், என்னை மன்னித்துவிடு என்று சொன்னார், ஒரு லட்சம் ரூபாயை ஆட்டோக்காரரிடமே கொடுத்து விட்டான். ஆட்டோக்காரன் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு தேவதையிடம் கொடுத்தான். அதற்க்கு, தேவதை "இந்தப் பணத்தை நீயே வைத்துக்கொள் என்றது.

[ஆட்டோக்காரன் நேர்மையாக இருந்தான். அதனால் தான் தேவதை அவன் கண் முன்னே தோன்றியது.]

[ஆட்டோக்காரன் சவாரி தொடரும்]

ரூபாயை ஆட்டோக்காரரிடமே கொடுத்து விட்டான். ஆட்டோக்காரன் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு தேவதையிடம் கொடுத்தான். அதற்க்கு, தேவதை "இந்தப் பணத்தை நீயே வைத்துக்கொள் என்றது.

நீதி: பேராசை பெருநஷ்டம் அடையும்.

- M. அனுசியா, வகுப்பு-7,

வள்ளுவர் நகர், சிடார் குழந்தைகள் வள மையம்

# 4. கிடைத்ததை விடலாமா



ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது, அப்போது ஒரு கருப்பு மானையும் ஒரு புள்ளி மானையும் கண்டது.

அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன.

சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தின் அருகே சென்றது. ஆனால் எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதே நேரத்தில், சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் ஒரு இடத்தில், இடது பக்கம் ஒரு மானும், வலது பக்கம் ஒரு மானும் வெவ்வேறு பகுதிகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. "எதைத் துரத்தலாம்?" என்று தயங்கி நின்றது.

பிறகு, "சரி... கருப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும்" என்று முடிவு செய்து கருப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலை தூரம் ஓடிப் போய்விட்டது.

உடனே சிறுத்தை, "அது வேகமாக ஓடக்கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது, பசி வேற அதிகமாகி விட்டது. சரி...புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்துத் திரும்பி வந்து எதிர் பாதையில் ஓடியது.

இப்படித்தான் முடிவெடுப்பதில் தயக்கம் காட்டுபவர்கள் கிடைத்ததை இழந்து நிற்கிறார்கள்.

- ஆ. அனுஶ்ரீ, வகுப்பு-4,
தாமஸ்நகர், சிடார் குழந்தைகள் வளமையம்.

# 5. சொர்க்கத்திற்கு செல்லும் வழி

ஒரு வீட்டுத் திண்ணையில் இரண்டு சந்நியாசிகள் அமர்ந்திருந்தார்கள், அப்போது அந்த வீதியில் சிலர் ஒரு பிணத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். இதைப் பார்த்த சந்நியாசி ஒருவர் தன்னுடன் இருந்த மற்றொரு சந்நியாசியிடம்" இந்தப் பிணம் சொர்க்கத்திற்குப் போகிறதா அல்லது நரகத்திற்குப் போகிறதா?" என்று கேட்டார்.

அவருடன் இருந்த மற்றொரு சந்நியாசி" இந்தப் பிணம் சொர்க்கத்திற்கு போகிறது" என்றார். அதை மறுத்த முதல் சந்நியாசி" இந்தப் பிணம் நரகத்திற்குப் போகிறது" என்றார் இப்படி இருவரும் ஒரு முடிவுக்கும் வராமல் தங்களுக்குள் பேச ஆரம்பித்தார்கள்.

அப்போது அந்த வீட்டின் வெளியே ஒரு பெண் வந்தாள். அவள் சந்நியாசிகள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டாள், அவள்" இதற்கு நான் விடை கூறுகிறேன்" என்று கூறிவிட்டு பிண ஊர்வலம் சென்றுகொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றாள். அவளும் பிண ஊர்வலத்துடன் சிறிது நேரம் நடந்தாள்.


பிறகு அவள் வீட்டின் நுழைவுவாயில் நின்றுகொண்டு" ஐயா! சந்நியாசியே அந்தப் பிணம் சொர்க்கத்திற்குப் போகிறது" என்றாள். அதற்கு, சந்நியாசிகள் எப்படி கூறுகிறீர்கள்? என்று கேட்டனர், அதற்கு அவள் பிணம் செல்லும்போது, ஊர்வலத்தில் போகிறவர்கள் ஐயோ' நல்ல மனிதர் இப்போது போய்விட்டாரே! இவர் நல்லவர், பல பேருக்குப் பல உதவிகள் செய்திருக்கிறார், ஊருக்கு நன்மை செய்தவர், பலரை வாழவைத்தவர். இவர் இன்னும் சில காலம் வாழ்ந்த்திருந்தால, ஊருக்குப் பல நன்மைகள் செய்திருப்பார்?...என்று ஊரார் இறந்துபோனவரைப் பற்றிச் சிறப்பாகப் பேசினார்கள் அதனால்" அவர் சொர்க்கத்திற்கு செல்கிறார்" என்று கூறினார்கள்.

அப்படி இல்லாமல், பிணம் செல்லும்போது ஊர்வலத்தில் போகிறவர்கள்" அப்பாடா!.. இன்றைக்குத்தான் இந்த ஊருக்கு விடிவுகாலம் வந்தது! இவன் செய்த அக்கிரமங்களுக்கு அளவே இல்லை. ஊழல், லஞ்சம் என்று எல்லா அநியாயங்களையும் செய்து பொது சொத்தை அபகரித்தவர், பல குடும்பங்களைச் சீரழித்தவர்' என்று இறந்து போனவர்களைப் பற்றி இழிவாகப் பேசினால் அவன் நரகத்திற்கு போகிறான் என்று பொருள்" என்று விளக்கம் கூறினாள்.

- தினேஷ்கண்ணன், வகுப்பு-9,

மஞ்சநாயக்கர்பட்டி. சிடார் குழந்தைகள் வள மையம்

# 6. மோட்டார் வண்டி உருவான கதை



தந்தையுடன் சிறுவன் ஒருவன் தெருவில் சென்றுகொண்டிருந்தான், எதிரில் ஒரு வண்டி மெதுவாக வந்துகொண்டிருந்தது. அந்த வண்டியை மாடும் இழுக்கவில்லை, குதிரையும் இழுக்கவில்லை. அதைப் பார்த்த சிறுவனுக்கு வியப்பு ஏற்பட்டது, அப்பாவிடம் அதைப் பற்றிக் கூறினான். அதுமட்டுமின்றி, அந்த வண்டியோட்டியிடம் சென்று வண்டியைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டான். அந்த வண்டியின் பெயர் (Road-Engine) ரோடு-எஞ்சின் எனவும், அது நீராவியால் ஓடுகிறது எனவும் அறிந்துகொண்டான். அன்றே அந்தச் சிறுவனுக்கு ஓர் ஆசை உண்டாயிற்று, மனிதர்கள் ஓட்டிச் செல்லக்கூடிய வண்டிகளைச் செய்து, அவை மிக வேகமாக ஓடுமாறு செய்ய வேண்டும் என்று நினைத்தான். பெரியவனானதும் ஓர் இயந்திரத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தான், பகலில் அங்கு வேலை செய்வான். இரவில், வேகமாக ஓடும் வண்டியை எப்படி கண்டு பிடிக்கலாம் என்று ஆராய்ச்சி செய்வான்." பல நாள் செய்த முயற்சி ஒரு நாள் வெற்றி பெற்றது". ஆம், மோட்டார் வண்டி கண்டு பிடிக்கப்பட்டது, அன்று மோட்டர் வண்டியைக் கண்டு பிடிக்க அயராது முயற்சி செய்து வெற்றி கண்ட அந்தச் சிறுவன்தான், அமெரிக்காவைச் சேர்ந்த ஹென்றி போர்ட் என்பவர். தாமே சொந்தமாக மோட்டார் தொழிற்சாலையொன்றை நிறுவி, ஆயிரக்கணக்கான மோட்டார்களை உருவாக்கினார். "மோட்டார் மன்னன்" என்று உலகமே அவரைப் புகழ்ந்தது. அவருடைய தொழிற்சாலையில் உருவான மோட்டார் கார்கள் உலகப் புகழ் பெற்றன. இளம் வயதிலிருந்தே புதிதாக ஒன்றை உருவாக்க வேண்டும் என என்னும் எண்ணத்தை நாம் வளர்த்துக்கொண்டால், முடியாததையும் முடித்துகாட்டலாம். விடாமுயற்சியும் கடின உழைப்பும் நம்மை மென்மேலும் உயர்த்தும்.

- செ. கௌதமி, வகுப்பு-7,

புங்கவர்நத்தம், சிடார் குழந்தைகள் வள மையம்

# 7. பழைமை பொன்போன்றது

ஓர் அழகான கிராமம், எங்குப் பார்த்தாலும் பச்சைபசேல் என்று பச்சைப்போர்வை போர்த்தியது போலக் காட்சி அளித்தது. அங்கு விவசாயம் தான் முதன்மையான தொழில். இரண்டு நண்பர்கள் இருந்தார்கள், அவர்களின் பெயர் மாரியப்பன் மற்றும் முத்துச்சாமி. இருவரும் இயற்கை விவசாயம் செய்து வந்தார்கள். அவர்களின் விவசாய முறையே,

அவர்களின் விளை நிலங்களை வளம் மிக்க நிலமாக வைத்திருந்தது. அவர்கள் இருவரும் தங்கள் நிலத்தில் விளைந்ததை ஏழை எளியோர்க்கும் தந்து மகிழ்ந்தனர். திடீரென்று முத்துச்சாமிக்கு உடல்நிலை குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதனால் மாரியப்பன், முத்துச்சாமியின் நிலத்தையும் சேர்த்துப் பார்த்துக்கொண்டார். சில நாட்கள் கழித்து முத்துச்சாமி இறந்து விட்டார். முத்துசாமியின் மகன் கணேசன் ஐ.டி நிறுவனத்தில் பணியாற்றினார், பின்பு அப்பாவின் நிலத்தில் விவசாயம் செய்ய முடிவெடுத்தார். ஏற்கனவே, இயற்கை விவசாயம் மட்டுமே செய்த நிலத்தில், கணேசன் செயற்கை விவசாயம் செய்ய முடிவெடுத்தார். மாரியப்பன், கணேசனிடம் இயற்கை முறையில் விவசாயம் செய்யச் சொல்லியும், கணேசன் கேக்கவில்லை. இருவரும் ஒரே நேரத்தில் விவசாயம் செய்தார்கள். ஆனால் கணேசனின் நிலத்தில் போட்ட பயிர் விரைவாக விளைந்துவிட்டது, கணேசனும் விளைந்ததை விற்பனை செய்து மகிழ்ந்தான். மாரியப்பனிடம் செயற்கை முறையில் விவசாயம் செய்வதுதான் லாபம் என்று கூறினார். நாட்கள் செல்லச் செல்லக் கணேசனின் நிலம் தன் வளத்தை இழந்துவிட்டது. கணேசன் தன் நிலத்திலிருந்து மண்ணை எடுத்து, மண் பரிசோதனை மையத்தில் கொடுத்துப் பரிசோதனை செய்தார். அங்கு, உங்கள் மண் அதன் வளத்தை இழந்துவிட்டது என்றார்கள். அதைக் கேட்ட கணேசன் வீட்டில் சோகத்துடன் இருந்தார்' அந்த வேளையில் மாரியப்பன் வந்து நடந்தது என்ன?.. கேட்டார், அதற்குக் கணேசன் நான் உங்க பேச்ச கேக்காமல் போனதால் இப்படி எல்லாம் நடந்துவிட்டது என்றார். நான் இனிமேல் இயற்கை விவசாயம் செய்வேன், அதுதான் நம் பாரம்பரிய முறை ஆகும். இந்தக் காலத்தில், யார்" இயற்கையை விரும்புகிறார்கள்!. சாப்பிடும் சாப்பாடு முதல் உடுத்தும் உடைவரை செயற்கையே நாடுகிறார்கள்.

நீதி :- என்றும் இயற்கைதான் நிரந்தரம்!

- செ. கௌதமி, வகுப்பு-7,

புங்கவர்நத்தம், சிடார் குழந்தைகள் வள மையம்

# 8. ஒற்றுமையே பலம்



ஒரு கோவில் கோபுரத்தில் சில நீல நிறப் புறாக்களும் சில வெள்ளை நிறப் புறாக்களும் வாழ்ந்து வந்தன. நீல நிறப் புறாக்களைவிட, தாம் அழகாக இருப்பதாக எண்ணி கர்வத்துடன் இருந்தன வெள்ளைப் புறாக்கள். சில நாட்களுக்குப் பின் அக்கோபுரத்தில் பராமரிப்பு வேலைகள் ஆரம்பமானது, அதனால் எல்லாப் புறாக்களும் கோபுரத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. புறாக்கள் எல்லாம் வேறொரு இடம் தேடி ஒரே திசையில் பறந்து சென்றன. அவைகள் பறந்து சென்றபோது, ஓரிடத்தில் வெயிலில் உலர்த்துவதற்காகப் பரப்பப்பட்ட நெற்களை கண்டன. கண்டதும், அவை அனைத்தும் ஒன்றாக அவ்விடத்திற்கு பறந்து சென்று காயப்போடப்பட்ட நெற்களை தின்று தீர்த்துவிட்டு, அருகே இருந்த ஒரு பெரிய மரமொன்றில் அமர்ந்தன. தானியத்தைப் பரப்பவிட்டு சென்ற வேடன் திரும்பி வந்து பார்த்தபோது நெல்மணிகள் ஒன்று கூட இல்லாததை கண்டு அதிர்ச்சியடைந்தான். தானியங்கள் காயப்போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதை பார்த்த வேடன், என்ன நடந்தது என்பதை புரிந்து கொண்டான். நாளைக்கு இந்தப் புறாக்களை எப்படியும் வலை விரித்துப் பிடித்துவிட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் வலை ஒன்றை தயார் செய்து, அந்த இடத்தில் விரித்துத் தானியங்களையும் போட்டு, புறாக்கள் வரும் வரை காத்திருந்தான். வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் வலை ஒன்றை தயார் செய்து, அந்த இடத்தில் விரித்துத் தானியங்களையும் போட்டு, புறாக்கள் வரும் வரை காத்திருந்தான். அடுத்த நாள் அங்கேவந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாகத் தரையிறங்கி உண்ணத் தொடங்கின.

சில மணித்துளிகளில் வலையில், அதன் கால்கள் சிக்கிக்கொண்டன, சற்றுத் தொலைவில் மறைந்திருந்த வேடன், நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களைப் பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை அறிந்து உயிர் மீதுள்ள ஆசையினால் எல்லாப் புறாக்களும், ஒன்றாக இறக்கையை விரித்துப் பறக்க ஆரம்பித்து, வலையையும் சேர்த்துக் தூக்கிக் கொண்டு பறக்க ஆரம்பித்தது. பறந்து செல்லும் போதே அதில் இருந்த நீலப் புறாக்கள் கர்வத்தோடு, எங்களது வலிமையால் தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்துப் பறக்கவில்லை யென்றால் அவ்வளவு தான் என்று கூறின. உடனே வெள்ளைப் புறாக்களும் நீங்கள் வலிமையானவர்கள் தான் ஒப்புக் கொள்கிறோம், ஆனால் எங்களைப் போன்று நீங்கள் அழகாக இல்லையே என்று கூறிக் கொண்டு ஒன்றுக் கொன்று சண்டையிட்டுக் கொண்டன. இதனால், அவைகளின் பறக்கும் திசை மாறி, ஒரு பெரிய மரத்தின் கிளையில் மாட்டிக் கொண்டன. இதைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

பொருள்;- ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

- **அ.அன்பரசி,** வகுப்பு-5,

தாமஸ்நகர், சிடார் குழந்தைகள் வள மையம்

# 9. சொர்க்கம் எது

ஒருமுறை சிவனும், பார்வதியும் வானத்தில் உலா வந்து கொண்டிருந்தனர், அப்போது குளக்கரையில் கொக்கு ஒன்று ஒற்றைக்காலில் நின்று கொண்டிருந்தது. உடனே பார்வதி சிவனிடம், இந்தக் கொக்கு ஏன் ஒற்றைக் காலில் நிற்கிறது? என்று கேட்டார். சிவன் கொக்கைப் பார்த்து, உனக்கு என்ன வேண்டும்? எங்களுடன் சொர்க்கத்திற்கு வருகிறாயா? என்று கொக்கிடம் கேட்டார். சொர்க்கத்தில் அயிரை மீன் கிடைக்குமா? என்று கேட்டது கொக்கு, கிடைக்காது என்றார் சிவன். அப்போ, சொர்க்கத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். எங்கே அயிரை மீன் கிடைக்கிறதோ, அதுவே எனக்குச் சொர்க்கம் என்றது கொக்கு.

நீதி: "எங்கே நமக்கு நிம்மதி கிடைக்கிறதோ, அதுவே நமக்குச் சொர்க்கம்"

- **J. சரவணன்,** வகுப்பு-8,

கீழஈரால், சிடார் குழந்தைகள் வள மையம்

# 10. கரடியும் - நண்பர்களும்



ஓர் அழகான கிராமம் அந்தக் கிராமத்தில் ஆறு, குளம், ஏரி, கிணறு, தோட்டங்கள் என நிறைந்து இருந்தன. அங்கு இரண்டு நண்பர்கள் இருந்தனர். அவர்களுடைய பெயர் விஜய் மற்றும் ஆனந்த், இவர்களில் விஜய் மிகவும் தைரியசாலி, ஆனால் ஆனந்த் பயந்த சுபாபம் உடையவன். ஒரு நாள் நண்பர்கள் இருவரும் பக்கத்து கிராமத்தில் நடைபெறும் திருவிழாவுக்குச் செல்ல முடிவு செய்தனர். அங்கு நிறைய கடைகள், ராட்டினங்கள் இருக்குமாம் அதைப் பார்க்க அதிக ஆவல் கொண்டனர். ஒரு காட்டைக் கடந்து செல்ல வேண்டும், ஆனந்த் பயந்தபடியே "விஜயிடம் உனக்குக் காட்டைக் கடந்து செல்லப் பயமாக இல்லையா?.விலங்குகள் இருக்கும் அல்லவா" எனக் கேட்டான், அதற்கு விஜய் எனக்குப் பயம் ஒன்றும் இல்லை; என்னுடன் நீ தைரியமாக வா எனக் கூறினான். நண்பர்கள் இருவரும் காட்டு வழியாக நடந்து செல்ல ஆரம்பித்தனர், ஆனந்த் பயந்த படியே நடந்து சென்றான், ஆனால் விஜயோ பாட்டு பாடிக் கொண்டே சென்றான். வழியில் புதருக்குள் கரடியின் சத்தம் கேட்டது, விஜய் உடனே பக்கத்தில் உள்ள ஒரு மரத்தில் ஏறிக் கொண்டான் ஆனால் ஆனந்தோ, பயந்தவாறே என்ன செய்வதென்று புரியாமல் நின்றுகொண்டிருந்தான். கரடி பக்கத்தில் வரவே ஆனந்த், மூச்சை இழுத்தபடியே கீழே படுத்துக் கொண்டான். கரடி, ஆனந்த் பக்கத்தில் வந்து அவனை முகர்ந்து பார்த்து விட்டு, இறந்து விட்டதாகக் கருதி சென்று விட்டது. அதனை மரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த விஜய் கீழே இறங்கி வந்து, ஆனந்திடம்" கரடி உன் காதில் என்ன சொன்னது எனக் கேட்டான்:" உன்னுடைய நல்ல நண்பனை ஆபத்தில் அறிந்து கொள்". எனக் கூறியது என்றான்.

நீதி: "உண்மையான நண்பனை ஆபத்தில் அறி".

- A. அனுஸ்ரீ, வகுப்பு-4

தாமஸ்நகர்-I, சிடார் குழந்தைகள் வள மையம்

# 11. தாத்தாவும், நாய் குட்டியும்

## காட்சி -1

(ஒரு ஊரில் தாத்தாவும், பாட்டியும் இருந்தார்கள்)



தாத்தா : லட்சுமி வாம்மா, கொஞ்சம் நேரம் நடந்திட்டு வரலாம்.

பாட்டி : இந்தா... வரேன்...

நாய் : லொள்...லொள்

தாத்தா : என்ன சத்தம்?


பாட்டி : உங்களுக்குப் பிடித்த நாய் குட்டிதான்.

தாத்தா : அடடே!.. நாய் குட்டியா? கொஞ்சம் தூக்கிட்டு வாயேன்.

பாட்டி : இந்தாங்க நாய் குட்டி...

தாத்தா : கொஞ்சம் கொடேன், இத நாமே வளர்க்கலாம்.


பாட்டி : சரி



## காட்சி-2

(சில நாட்களுக்குப் பிறகு) (பேரன், பேத்தி ஊரிலிருந்து வந்தார்கள்...)

(உறவுகள்: பேரன், பேத்தி, மகள், மகன், பாட்டி, தாத்தா)



பேரன் : ஹை. ஜாலி நாய் குட்டி. அம்மா, இதை நாங்க தூக்கலாமா?

மகள் : சரி, தூக்கு... பாத்து தூக்குடா...

பேரன் : ஐயோ.... ஆ... வலிக்குது.

மகள் : இதுக்குதான் சொன்னேன்...

(பாட்டியும், தாத்தாவும் வீட்டிற்கு வந்தார்கள்)

பாட்டி : இப்ப பார்த்தீங்களா. இதுக்குதான் நாய்க்குட்டியை வளர்க்காதீர்கள் என்று சொன்னேன்.

மகன் : நாய்க்குட்டியை தூக்கி வெளியே போடுங்க, அப்பா

## காட்சி-3

(தாத்தா, பேரனையே பார்த்துக்கொண்டேயிருந்தார்)

(உரையாடல்: தாத்தா, மகன், பேரன்)

தாத்தா : வலிக்குதா...பா

பேரன் : ஆமா, தாத்தா

மகன் : ஏய்... நாயே வெளியே போ.

சில நாட்களுக்குப் பிறகு

தாத்தா : நாய்... எங்கதான் போச்சினே தெரியலையே?

பேரன் : நாய் இல்லாம, கவலையாக இருக்கு தாத்தா.

# காட்சி - 4

(தாத்தா வீட்டிலேயே நாய், குட்டியை ஈன்றது)

உரையாடல்: நாய், தாத்தா, பேரன், நாய்க்குட்டிகள்.



நாய்க்குட்டிகள் : லொள்...லொள்...லொள்.

பேரன் : என்ன சத்தம்?.. சரி பார்க்கலாம், ஹாய் ... நாய்க்குட்டிகள்! தாத்தா சீக்கிரம் வாங்க.

தாத்தா : என்ன?.. பேரான்டி,

பேரன் : தாத்தா, இதோ... நாய்க்குட்டிகள்

தாத்தா : நாய்க்குட்டியை இங்கே கொடு பார்க்கலாம், இதையும் நம்மலே வளர்க்கலாம்.

நாய் : லொள்...லொள்

(குட்டியைக் காணோம். ஓ... இவர்கிட்ட இருக்கா நம்ம குட்டிக)

தாத்தா : இதுக எந்த நாயோட குட்டிக? அடடே!.. நம்ம வளர்த்த நாய். உன் குட்டியா?

நாய் : லொள்... லொள்

தாத்தா : நாய்க்குட்டிகளை பார்த்து, "உங்க அம்மா எதுக்கு கோபமாகப் போனாள்? இங்கே பார், என்னுடைய பேரன், பேத்திகள் இரண்டு வருடம் கழித்து வந்தாங்க, இப்போ எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கு.

நாய் : மன்னிச்சிடுங்க தாத்தா, நாம இனிமேல் என் குட்டியோடு ஒன்றாகவே இருக்கலாம்.

பேரன் : ஐயா!.. ஜாலி! ஜாலி!

நீதி: ஒற்றுமையே வாழ்க்கை...

- சொர்ணதேவி, வகுப்பு-5,
கீழஈரால், சிடார் குழந்தைகள் வள மையம்



குழந்தைகளின்

# கவிதைகள்

## நமது கடமை


வீட்டில் வேலை செய்யலாம்
விரும்பி நாமும் செய்யலாம்
படுக்கையைச் சுருட்டி வைக்கலாம்
தரையைக் கூட்டிப் பெருக்கலாம்

உண்ணும் தட்டைக் கழுவலாம்
உடுத்தும் உடைகள் மடிக்கலாம்
கடையில் பொருட்கள் வாங்கலாம்
செடிகள் நட்டு வளர்க்கலாம்

இந்த வேலை பெரிதென
ஏற்றத்தாழ்வு இல்லையே!
எந்தவேலை ஆயினும்
எல்லோரும் செய்வோமே!

- செ. செல்வநாராயணன், வகுப்பு- 2,
தாமஸ்நகர், சிடார் குழந்தைகள் வள மையம்

# கொரோனா – விழிப்புணர்வு



கொக்கரக்கொக்ரக்கோ கொரோனா இப்ப...
எங்கள தாக்க வரானா. (2)
நாங்க கைய கூப்பிதா வணக்கம் சொல்லுவோம்
கைய குலுக்கவே மாட்டோங்க. (2)
மாஸ்க் போட்டுதான் மாஸ் காட்டுவோம்
இருமல் தும்மலோ நோ நோங்க. (2)
சோப்பு போட்டுதான் கைய கழுவுவோம்
ரொம்ப சுத்தமா இருப்போங்க (2)
2 மீட்டர் இடைவெளி விட்டு எங்க
நட்பை வளர்ப்போங்க (2)
வீட்டுக்குள்ளையே பாதுகாப்பாயிருந்து
நம்ம வீட்டையும் காப்போங்க
நம்ம நாட்டையும் காப்போங்க
ஜாதி மதம் கடந்து ஒன்னாசேர்ந்து
மனித நேயத்தை காப்போங்க (2)
கொரோனா நோயைத்தான் ஒழிப்போங்க(2)
கொக்கரக்கொக்ரக்கோ கொரோனா இப்ப...
எங்கள தாக்க வரானா...

- முருகலட்சுமி, வகுப்பு-4,
புங்கவர்நத்தம், சிடார் குழந்தைகள் வள மையம்

## மழை



வானத்து ராசாவே மலைக்கு இறங்கும் புண்ணியரே
சோளத்து பொன் புகழாம் சோத்துக்கே வாடுதமே
கோட மழை பெய்யாதோ? குழந்தை பஞ்சம் தீராதோ
ஏத்து மீனு ஏராதோ எங்க பஞ்சம் தீராதோ
சட்டியிலே மாகரச்சி சந்தியெல்லாம் கோலமிட்டு
கோலம் அழிய ஒரு கோட மழை பெய்யாதா
முட்டியிலே மாகரச்சி முற்றமெல்லாம் கோலமிட்டு
முத்து மழை பெய்யாதோ...

- செ. முத்தரசி, வகுப்பு-11,
சிடார் குழந்தைகள் வள மையம்




## பொம்மை

அம்மா தந்த பொம்மை
அழகழகு பொம்மை
தலையை ஆட்டும் பொம்மை
தஞ்சாவூர் பொம்மை

தாளம் தட்டும் பொம்மை
தாவி ஓடும் பொம்மை
நான் விரும்பும் பொம்மை
நல்ல கரடிப் பொம்மை

- S. சந்தனமாரி, வகுப்பு-5, தாமஸ்நகர்,
சிடார் குழந்தைகள் வள மையம்

## யானை




அதோ பார் யானை
யானை வயிறு பானை
தூணைப் போலக் காலு
காதுகளை ஆட்டி
தந்தம் தன்னை நீட்டி
தும்பிக்கையை ஆட்டி
வருதுபாரு யானை

- செ. சுடலை மணி, வகுப்பு-3, மஞ்சநாயக்கர்பட்டி,
சிடார் குழந்தைகள் வள மையம்

# நல்ல எதிர்காலம்

அக்கா அண்ணன் வாங்க
தம்பி தங்கை வாங்க (2)




எங்க பாட்டு படிப்போம் நாம - புது
பாட்டு படிப்போம் நாம

அச்சமும் பயமும் வந்திருச்சி (2)

ஏன் பள்ளிக்கூடம் போகல, பாடம் ஒன்னு படிக்கல
ஒழுக்கமுனு இல்லையானு கவலைப்பட்டாங்க,
எங்க அம்மா கவலைப்பட்டாங்க

அதுக்கு என்ன செய்ய


அதையும் நாங்க போக்கவே
குழந்தை வள மையத்துக்குப் போனோங்க-
சிடார் குழந்தை வள மையத்துக்குப் போனோங்க
ஆகா தைரியமா இருக்கணும்,
பாடங்களைப் படிக்கணும்
பெரியவர்களை மதிக்கணும்
உதவி ஒன்னு செய்யணும் சொல்லித் தந்தாங்க
அவங்க சொல்லித் தந்தாங்க - யாரு



சிடார் குழந்தை வள மையத்திற்கு
அப்போ நாங்களும் வரட்டுமா
வாங்க குழந்தைகளே வாங்க...

- அனுஷியா, வகுப்பு-7,
தாமஸ்நகர்-1, சிடார் குழந்தைகள் வள மையம்

# காந்தியடிகள் பாடல்



இந்தியாவின் தந்தை யாரு
இந்தியாவின் தந்தை யாரு
மகாத்மாகாந்தியின்றி
வேறு யாரு?

கதர்வேட்டி அணிந்தவரு
கண்ணாடி போட்டவரு
கையில் தடி கொண்டவரு
கண்ணியமாக வாழ்ந்தவரு

இந்தியாவின் தந்தை யாரு

நாட்டுக்காக உழைத்தவரு
நல்ல பெயர் எடுத்தவரு
ஏழைகளை மதித்தவரு
எளிமையுடன் வாழ்ந்தவரு

இந்தியாவின் தந்தை யாரு

இந்தியாவின் சுதந்திரத்தை
வாங்கி நமக்குத் தந்தவரு
இந்தியாவின் தந்தையாம்
நம் இதய காந்தியாம்.

இந்தியாவின் தந்தை யாரு

- செ. கௌதமி, வகுப்பு-7,
புங்கவர்நத்தம், சிடார் குழந்தைகள் வள மையம்

# கொரோனா தாக்குதலின் வேதனைகள்



சீனாவுல பிறந்த" கொரோனா "
இங்க எதுக்கு வந்த "கொரோனா"


முன்ன எல்லா தும்முனா ஆயுசு நூருனாங்க
இப்ப எல்லா தும்முனா வந்துருச்சு நோய்ங்காங்க (2)
உன்னால தான் எங்க படிப்பு போச்சு
உன்னால தான் எங்க அப்பா வேலை போச்சு
ஊரடங்கே  எங்க நிலைமை ஆச்சு (சீனாவுல)

பட்டினியும், தனிமையும் பழகிப்போச்சு
மூச்சு விடக் கூட யோசனை ஆச்சு (2)
மூன்றாம் பிறை போல எங்க மகிழ்ச்சி ஆச்சி (சீனாவுல)

ஓடிரு, ஓடிரு கொரோனா _ இந்த
உலகத்தை விட்டே ஓடிரு கொரோனா...(2)

- ஜே.காயத்திரி, வகுப்பு-10,
கீழ ஈரால், சிடார் குழந்தைகள் வளமையம்

# கடலோடு விளையாடு



விடிவெள்ளி நம் விளக்கு -ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் -ஜலசா
அடிக்கும் அலை நம் தோழன் -ஜலசா
அருமைமேகம் நமது குடை -ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை -ஜலசா
விண்ணின் இடி காணும் கூத்து -ஜலசா

பாயும்புயல் நம் ஊஞ்சல் -ஜலசா
பனிமூட்டம் உடல்போர்வை -ஜலசா
காயும் கதிர்சுடர் கூரை -ஜலசா
கட்டுமரம் வாழும் வீடு -ஜலசா
மின்னல்வரி அரிச்சுவடு -ஜலசா
பிடிக்கும் மீன்கள் நம்பொருள்கள் -ஜலசா
முழுநிலவே கண்ணாடி -ஜலசா
மூச்சடக்கும் நீச்சல் யோகா -ஜலசா
தொழும் தலைவன் பெருவானம் -ஜலசா
துணிவோடு தொழில் செய்வோம் -ஜலசா
விடிவெள்ளி நம் விளக்கு -ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் -ஜலசா
அடிக்கும் அலை நம்தோழன் -ஜலசா

- ச. பாலவிக்னேஷ், வகுப்பு-10
புங்கவர் நத்தம், சிடார் குழந்தைகள் வள மையம்

# கருத்த புள்ளே

அனுஷியா : ஏ…ஏ … ஏ … ஏ சின்னப் புள்ளே

கார்த்திகா : சொல்லு புள்ளே

அனுஷியா : ஏ செவத்த புள்ளே

கார்த்திகா : சொல்லு புள்ளே

அனுஷியா : ஊருக்குள்ளே கொரோனா வந்திருச்சி - அது ஒன்னு, இரண்டு பேருக்குப் பரவிருச்சி

கார்த்திகா : ஏ… ஏ… ஏ… ஏ செவத்த புள்ளே

அனுஷியா : சொல்லு புள்ளே

கார்த்திகா : யாரு? யாருக்கு? அது பரவிருச்சி

அனுஷியா : ஏ… ஏ … ஏ … ஏ கருத்த புள்ளே

கார்த்திகா : சொல்லு புள்ளே

அனுஷியா : சின்ன சின்னக் குழந்தைகளுக்குப் பரவிருச்சி எதிர்ப்புச் சக்தி இல்லாதவர்களுக்குத் தாக்கிருச்சாம்…

கார்த்திகா : ஏ… ஏ … ஏ … ஏ கருத்த புள்ளே

அனுஷியா : ஏய்!

கார்த்திகா : முடி கருத்த புள்ளே

அனுஷியா : சொல்லு புள்ளே

கார்த்திகா : கொரோனாவே தடுக்கத்தான் தடுப்பு ஊசி வந்திருச்சு.

அனுஷியா : மக்கள் தடுப்பு ஊசியைப் போடத்தான் தயங்குறாங்க

கார்த்திகா : அந்த அறியாமைய, நாம போக்கணும் புள்ளே.

- M. அனுஷியா, வகுப்பு-7,
வள்ளுவர் நகர், சிடார் குழந்தைகள் வள மையம்.

# புதுவாழ்வு

புதுவாழ்வு நமக்குப் புதுவாழ்வு
பெருவாழ்வு நமக்குப் பெருவாழ்வு
நம் இந்தியா குடியரசு ஆனதால்
மறுவாழ்வு நமக்கு மறுவாழ்வு

அடிமை சிறைவாழ்விலிருந்து புதுவாழ்வு
ஆங்கில ஆட்சியிலிருந்து புதுவாழ்வு
நம் இந்தியா குடியரசு ஆனதால் புதுவாழ்வு

சமூக கொடுமையிலிருந்து புதுவாழ்வு
மூடப் பழக்கத்திலிருந்து புதுவாழ்வு
நம் இந்தியா குடியரசு ஆனதால் புதுவாழ்வு

அடிமை சிறைவாழ்வு இனி நமக்கில்லை
நாசம் மோசம் இனி நமக்கில்லை
நம் இந்தியா குடியரசு ஆனதால் புதுவாழ்வு

- செ. கௌதமி, வகுப்பு-7,
புங்கவர்நத்தம், சிடார் குழந்தைகள் வள மையம்



# குழந்தைகளின் படைப்பு

## 1. ஓவியம்



**பா. சுதா,** வகுப்பு 8,
கீழஈரால்



**த.தாரணி,** வகுப்ப 8,
கீழஈரால்



**சு. கார்த்திகா,** வகுப்பு 9,
கீழஈரால்



**த. சொர்ணாதேவி,** வகுப்பு 5,
கீழஈரால்




**த.தாரணி,** வகுப்பு 8,
கீழ ஈரால்




**K.கணேஷ் குமார்,** வகுப்பு 5,
தாமஸ் நகர் 2




**த.தாரணி,** வகுப்பு 8,
கீழ ஈரால்



**சுபாதினி,** வகுப்பு 8,
தாமஸ்நகர்




**மா.மாரிசெல்வம்,** வகுப்பு 8,
புங்கவர்நத்தம்



**செ. மாரிமுத்து,** வகுப்பு 9,
வள்ளுவர் நகர்



கு. சௌந்தரவள்ளி, வகுப்பு 7,
புங்கவர்நத்தம்



செ. கௌதமி, வகுப்பு 7,
புங்கவர்நத்தம்



த. சொர்ணாதேவி, வகுப்பு 5,
கீழஈரால்



k. அர்ச்சனா, வகுப்பு-6,
கூசாலிபட்டி



C. அபிஷேக், வகுப்பு 4,
கீழஈரால்




அழகர், வகுப்பு-8,
ஜவஹர்லால்புரம்



**ஆ. அனுஷியா,** வகுப்பு 6,
தாமஸ் நகர் 1



**செ. காவியன்,** வகுப்பு 7,
கூசாலிப்பட்டி



**R. கதிர் ஓவியன்,** வகுப்பு 3,
தல்லாகுளம்

# 2. குழந்தைகள் எடுத்த புகைப்படங்கள்



அழகர், ஜவஹர்லால்புரம்



அழகர், ஜவஹர்லால்புரம்



பாவனா தல்லாகுளம்



பாலவிக்னேஷ், புங்கவர்நத்தம்

ஜிண்டால் பல்கலைக்கழகத்தின் கலைப் பள்ளி நடத்திய தேசிய அளவிலான புகைப்படப் போட்டியில் இரண்டாம் பரிசை வென்றார்



பாவனா தல்லாகுளம்



அரிராம் பெருமாள், கோவில்பட்டி



கிஷோர், ஜவஹர்லால்புரம்



முகிலன், ஜவஹர்லால்புரம்



கோவில்பட்டி



கோவில்பட்டி



துரைபாலா, ஜவஹர்லால்புரம்



முகில்வர்ஷன், கோவில்பட்டி



மனோஜ், மீனாம்பாள்புரம்



ராஜி, தல்லாகுளம்



சுப ஸ்ரீ, தல்லாகுளம்



கதிர் ஓவியன், தல்லாகுளம்



மனோஜ், மீனாம்பாள்புரம்



மனோஜ், மீனாம்பாள்புரம்



சுதன் பாலா, ஜவஹர்லால்புரம்

# 3. குழந்தைகளால் உருவாக்கப்பட்ட குழந்தைகளின் படம்.

எங்களின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்துவதற்காகப் புதுமாற்று சிந்தனை முயற்சியினை சிடார் முன்னெடுத்த செயல்பாடுதான் குழந்தைகளால் உருவாக்கப்பட்ட குழந்தைகளின் படம் (Children Making Children's Film). எங்கள் வாழ்க்கைமுறையில் எதிர்கொள்கிற பிரச்சனைகளும் மற்றும் தினந்தோறும் நாங்கள் கடந்து வரும் பாதைகளையும் மையமாகக்கொண்டு சிடார் வளமைய குழந்தைகளாகிய நாங்களே கதை எழுதி, இயக்கி, நடித்து, தொகுத்தமைத்து உருவாக்கப்பட்ட படம் "LITTLE DREAMS" எங்களின் அன்றாட வாழ்க்கை முறையை நாங்களே திரைகளில் பார்ப்பது என்பது எங்களை பற்றிய நேர்மறை எண்ணத்தை மேலோங்கச் செய்வதிலும், குழந்தைகள் மீதான மற்றவர்களின் கண்ணோட்டத்தை மாற்றி அமைப்பதிலும் குழந்தைகளால் உருவாக்கப்பட்ட குழந்தைகளின் படம் குழந்தைகளிடம் தன்னம்பிக்கையையும், திறமையை வெளிகொண்டுவருவதர்க்கு அமைந்த வாய்ப்பே இம்முயற்சியின் வெற்றியாகப் கருதுகிறோம்












**எங்களின் புது முயற்ச்சியில் உருவாக்கப்பட்ட LITTLE DREAMS குரும்ப்படத்தை பார்ப்பதற்கும் படம் உருவாக்கப்பட்ட விதத்தைப் பார்பதற்கும் கீழ் கண்ட வலையொலியிணை பயன்படுத்தலாம்.**

**https://www.youtube.com/watch?v=SVkmObnEcUg&t=72s**

**https://www.youtube.com/watch?v=BxoNDsR70xg**

சிடார் (Centre for Education Development Action and Research-CEDAR) 1994ம் ஆண்டு சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்களால் நிறுவப்பட்டது. முதற்கட்டமாக குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பதற்காக சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி, எட்டயபுரம் பகுதிகளில் 150 கிராமங்களில் பணியாற்றியது. இதனை தொடர்ந்து கல்வி கற்பது மட்டும் குழந்தை உரிமையல்ல, படைப்பாற்றல் கொண்ட முழுமையானக் கல்வியே குழந்தைகளின் உரிமை என்ற தொலைநோக்கு பார்வையுடன் செயலாற்றி வருகிறது. தூத்துக்குடி, மதுரை மாவட்டங்களில் குழந்தைகள் வள மையங்களை உருவாக்கி விளிம்பு நிலை சமுகத்தில் வசிக்கின்ற குழந்தைகளின் கல்வி, படைப்பாற்றல், கலை மற்றும் ஆளுமைதிறன்களை வெளிகொணர்ந்து, வலுபடுத்தி அவர்களை சமுக மைய நீரோட்டத்தில் பங்கேற்க வைக்கிறது. இது ஒரு புதிய விடியலுக்கான முயற்சி!





47/23, 'Thy Grace' Old Natham Road, Madurai-625 014

phone: 0452-2680701, Mobile: +91 95855 95855

E-Mail: info@cedarindia.org

Website:http://cedarindia.org